11-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை முடிந்த பிறகு அந்தந்தத் துறையினுடைய மானியக்கோரிக்கை முடிவுற்றதற்குப் பிறகு தான் அரசு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும், முந்தாநாள் — 24 அன்றுதான் அந்த மானியக் கோரிக்கை முடிவுற்றிருக்கிறது என்பதையும் அது சம்பந்தப்பட்ட ஆணை விரைவாக அனுப்பப்படும் என்பதையும், நிச்சயமாக இந்த வருஷம் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதையும் நான் அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 அறிக்கைஅளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(6) சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில், ஒரு கொள்கைப் பிரச்சினை இருப்பதனால் இதை எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."